# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.
Calendar )
Preliminary Register) SC.15/2024
Sessions)

( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | கனகராஜ் | -- | |
| Father's Name | மாரியப்பன் | Calling | கொத்தனார் வேலை |
| Village | சேத்தூர் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் தாலுகா சேத்தூர் பிள்ளைமார் கிழமேடு தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அசா2 காஜேந்திர குமார் எனது மாமா ஆவார். அசா1 அவருடைய மனைவி ஆவார். கடந்த 07.03.2023 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் சிவகணேசன் என்பவரும் சேத்தூர் மெயின்ரோடு ஒயின்ஷாப் அருகே நின்றுக்கொண்டிருந்தோம். அப்போது எனது மாமா காஜேந்திர குமாரும் அவரது மனைவி அன்னபூர்ணமும் கண்ணன் நகை கடை அருகே வந்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த எனக்கு ஏற்கனவே தெரிந்த எங்கள் ஊரைச்சேர்ந்த ஆஜர் எதிரியான ஈஸ்வரன் எனது மாமா காஜேந்திர குமாரை பார்த்து தேவடியான மகனே என்று அசிங்கமாக பேசி அரிவாளால் கழுத்தை நோக்கி வெட்டும்போது எனது மாமா வலது கையால் தடுத்ததில் அவருக்கு வலது கையில் வெட்டுப்படவும் அப்படியே கிழே விழுந்துவிட்டார். எதிரி மீண்டும் அரிவாளல் எனது மாமாவின் மண்டையில் ஓங்கி ஓங்கி வெட்டினார். நானும் சிவகணேசனும் எதிரியை பார்த்து ஏலே என்று சத்தம் போடவுடம் அவர் அரிவாளுடன் கிழக்கு நோக்கி சென்றுவிட்டார். காயப்பட்ட எனது மாமாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஏற்றிக்கொண்டு நானும் காளி மற்றும் சிவகணேஷ் மற்றும் அன்னபூர்ணம் ஆகியோர்களும் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்தோம். அரசு மருத்துவர் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி கொண்டு போகும்படி கூறினார். ஆனால் நாங்கள் ஒரு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் எனது மாமாவை ஏற்றிக்கொண்டு மதுரையிலுள்ள ப்ரித்தி மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தோம். எதிரி எனது மாமாவை வெட்டுவதற்கு பயன்படுத்திய அரிவாளை பார்த்தால் என்னால் அடையாளம்

காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சாபொ1 அரிவாள்தான் எதிரி பயன்படுத்திய அரிவாள் ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of February 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**